DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC /122/2019

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பால்ராஜ் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ஜேசுமணி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 23/06/2026

(எதிரிகள் 1, 2 ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் மாங்கரை அம்மாபட்டியில் குடியிருந்து அம்மாபட்டி ஊராட்சியில் ஊராட்சி செயலராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீலமலைக்கோட்டையில் ஊராட்சி செயலராக பணிபுரிந்த போது நானும், HDFC வங்கியில் வேலை செய்யும் குப்புசாமியும், JCB ஆப்ரேட்டர் முனியப்பன் மற்றும் இன்னும் சிலர் நீலமலைக்கோட்டை சோத்தான் நாயக்கன்குளம் தெற்கு பகுதி அவுரி மேட்டு ஓடைப்பகுதியில் உள்ள நீர் நிலை புறம்போக்கு ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக கடந்த 16.03.2019 ஆம் தேதியன்று சென்றிருந்தோம். அதற்கு முன்னாடி நாளான 14.03.2019 ஆம் தேதியன்று ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த பகுதியை அளந்து கல் ஊன்றி இருந்தோம். அதன் பின்னர் 16.03.2019 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொண்டிருக்கும்போது தங்களது நிலத்திற்குள் வரவேண்டாம் என்று சொல்லை எங்களை வேலை செய்ய விடாமல் தடுத்து, தகாத வார்த்தைகளால் பேசி எங்களது நிலத்திற்குள் நுழைந்தால் கொன்று விடுவேன் என்று ஆஜர் எதிரி கருப்புசாமி கையில் அருவாளை வைத்து மிரட்டினார். அதன் பின்னர் சம்பவத்தை குறித்து ஒட்டன்சத்திரம் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன்.

என்னிடம் காட்டப்படும் புகார் தாரர் கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் எனது புகாரிலும், போலீசார் விசாரணையிலும் எதிரிகள் எந்தவிதமான அரசு பணியை என்னை செய்ய விடாமல் தடுத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எனது புகாரிலும் போலீசார் விசாரணையிலும் எதிரிகள் என்ன கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நிலத்தை அளப்பதற்கு முன்பாக ஆஜர் எதிரிகளுக்கு முறையான அறிவிப்பு வருவாய் துறையினர் மூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் எனது புகாரிலும் , போலீசார் விசாரணையிலும் எதிரிகளின் நிலத்தின் சர்வே எண் மற்றும் நிலத்தின் விஸ்திரனத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சர்வே எண் மற்றும் விஸ்திரனத்தை குறிப்பிட்டு இருந்தால் நான் கொடுத்த பொய் புகாருக்கு பாதகமாக அமைந்திருக்கும் என்றால் சரியல்ல.

2) ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக சென்றபோது புகைப்படங்கள் எடுத்தேனா என்றால் எடுத்தேன். எதிரி கருப்புசாமி அருவாளை வைத்து மிரட்டியதாக சொல்லப்படும் நிலையில் கருப்புசாமியை அருவாளுடன் புகைப்படம் எடுத்தேனா என்றால் புகைப்படம் எடுத்தேன். (புகைப்படம் எடுக்கவில்லை என்று சொல்லிவிட்டு திரும்பவும் புகைப்படம் எடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.) நான் சொல்வதுபோல் எதிரி கருப்புசாமி அருவாள் எதையும் வைத்து மிரட்டவில்லை என்றாலும் அதனால் தான் எதிரி கருப்புசாமியை அருவாளுடன் புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றம் திண்டுக்கல் முன்பாக அ.வ.எண் 469/2019 ல் ஒரு இந்த பிரச்சனை தொடர்பான உரிமையியல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

3) நான் நீலமலைக்கோட்டை பஞ்சாயத்திலிருந்து எந்த ஆண்டு பணிமாறி வேறு பஞ்சாயத்திற்கு சென்றேன் என்றால் கடந்த 2019 ஆம் ஆண்டு சென்றேன். நான் எதிரிக்கு சொந்தமான நிலத்தில் ஆக்கிரமிப்பை அகற்றும்போது எதிரிக்கு சொந்தமான எத்தனை தென்னை மரங்களை பிடிங்கி சாய்த்தேன் என்றால் நீர்நிலைப் புறம்போக்கில் இருந்த 50 தென்னை மரங்களை பிடிங்கி சாய்த்தேன். மேற்சொன்ன 50 தென்னை மரங்களை என்னுடைய அறிவுறுத்தலின் பேரில்தான் பிடிங்கி சாய்க்கப்பட்டது என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்பேரில் நீர்நிலை ஆக்கிரமிப்பில் இருந்த மரங்கள் அகற்றப்பட்டது.

4) மேற்படி இந்த வழக்கில் 50 மரங்களை அகற்றுவதற்காக மாவட்ட ஆட்சியரின் உத்தரவு சமர்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு முடியும் வரை என்னால் மேற்சொன்ன 50 தென்னை மரங்களை அகற்றும்படியாக உத்தரவிடப்பட்ட மாவட்ட ஆட்சியரின் உத்தரவை தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

என்னால் தாக்கல் செய்ய முடியும். வழக்கு முடிவதற்குள் அவ்வாறானமாவட்ட ஆட்சியரின் உத்தரவை தாக்கல் செய்யவில்லை என்றால் மாவட்ட ஆட்சியரின் உத்தரவு இல்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 469/2019—ன் கீழ் மாண்பமை மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றத்தால் 27.11.2023 ஆம் தேதியிட்ட உத்தரவில் நான் ஆக்கிரமிக்கப்பட்டதாக சொல்லப்படும் நிலங்கள் எதிரிக்கு சொந்தமானது என்று தீர்ப்பாகி உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) மேற்சொன்ன தீர்ப்பின் அடிப்படையில் எதிரியின் நிலத்தில் இருந்த 50 தென்னை மரங்களை அகற்றியது தவறானது என்றும், நான் ஆக்கிரமிப்பு அகற்றம் செய்த பகுதியானது எதிரிக்கு சொந்தமான பட்டா நிலம் என்றால் சரியல்ல. நான் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவை பின்பற்றி ஆக்கிரமிப்பை அகற்றினேன் என்றால் சரிதான். மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவில் ஆக்கிரமிக்கப்பட்ட நீர்நிலைப்பகுதி, நீர்நிலை ஓடை ஆகியவற்றின் ஆக்கிரமிப்புகளைத்தான் அகற்ற சொல்லி உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான். ஆனால் எதிரிகளின் பட்டா நிலத்தில் உள்ள தென்னை மரங்களை பிடுங்க சொல்லியோ, அல்லது அவரது நிலத்தில் ஓடையை அமைக்க உத்தரவிடப்படவில்லை என்றால் சரிதான்.

6) மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவை வைத்துக்கொண்டு எதிரிக்கு வேண்டாத ஆட்களின் தூண்டுதலின் பேரில் முறைகேடாக எதிரிகளின் நிலத்தில் இருந்த 50 தென்னை மரங்களை அகற்றி, ஓடையாக அமைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. தற்சமயம் தகுந்த நீதிமன்றத்திர உத்தரவு பெற்று எதிரிகள் ஓடையை மாற்றி அமைத்து நிலத்தின் நிலைமையை சீர்செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் மேற்படியாக செய்த அகற்றுதலின் காரணமாக எதிரிகளின் வாழ்க்கை தரமானது 10 ஆண்டுகள் பின்னோக்கி சென்றுவிட்டது என்றால் சரியல்ல. நான் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதைபோல எதிரிகள் தகாத வார்த்தைகளால் என்னை பேசவில்லை என்றாலும் அரசு பணியை செய்ய விடாமல் தடுக்கவில்லை என்றாலும் எதிரி கருப்புசாமி அருவாளை கொண்டு கொலை மிரட்டல் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.23 17:37:37 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 23/06/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate  At Oddanchatram

Case No : CC /122/2019

List of Witness : Lw3

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முனியப்பன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ஆறுமுகம் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :-  23/06/2026

(எதிரிகள் 1, 2 ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் மாங்கரையில் குடியிருந்து JCB ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.03.2019 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் சோத்தான் குளத்தின் ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக நான் , BDO விஜயசந்திரிகா, குப்புசாமி, செயலர் பால்ராஜ்  ஆகியோர்கள் சென்றோம். ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக சென்று ஓடையை அகற்றி கொண்டு இருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் எங்களை செய்யக்கூடாது என்று தடுத்து, அருவாளை எடுத்து மிரட்டி தேவிடியா என்று ஆபாச வார்த்தைகளால் பேசி எங்களை மிரட்டினர். ஆஜர் எதிரி கருப்புசாமி அருவாளை எடுத்து எங்களை மிரட்டினார். சம்பவத்தை குறித்து பால்ராஜ் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னை எங்கு வைத்து எத்தனை மணிக்கு எந்த தேதியில் போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் 16.03.2019 ஆம் தேதியன்று மாலை 7.00 மணியளவில்  போலீசார் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள். நான் எனது JCB ஐ கொண்டு நான்தான் எதிரிகளின் இடத்தில் இருந்த

தென்னை மரங்களை பிடிங்கினேன் என்றால் சரிதான். அந்த JCB யின் பதிவு எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. நான் பிடிங்கி போட்ட தென்னை மரங்கள் யாருக்கு சொந்தமானது என்றால் எதிரி கருப்புசாமிக்கு சொந்தமானது. நான் சொல்வதுபோல் தேவிடியா என்ற வார்த்தையால் எதிரி யாரையும் பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த வேலையையும் செய்யவிடாமல் தடுக்கவில்லை என்றாலும் எதிரி கருப்புசாமி அருவாளை காட்டி கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல.

2) ஊராட்சி செயலர் பால்ராஜும் எதிரிக்கு வேண்டாதவர்களும் சொல்லிக் கொடுத்துதான் இந்த வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.23 17:37:50 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 23/06/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC /122/2019

List of Witness : Lw4

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | குப்புசாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பழனிச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 23/06/2026

(எதிரிகள் 1, 2 ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது பழனியில் குடியிருந்து HDFC வங்கியில் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.03.2019 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் BDO விஜயசந்திரிகா, ஊராட்சி செயலாளர் பால்ராஜ் மற்றும் JCB ஆப்ரேட்டர் முனியப்பன் ஆகியோர் ஓடை ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக நீலமலைக்கோட்டை ஊராட்சி சோத்தான் நாயக்கன் குளம் தெற்கு பகுதி அவுரி மேட்டு ஓடை சென்றிருந்தோம். ஏற்கனவே அங்கு நிலமானது அளக்கப்பட்டு கற்கள் ஊன்றப்பட்டிருந்தது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் நீர்நிலை ஆக்கிரமிப்பை அகற்ற கூறி உத்தரவிடப்பட்டிருந்த உத்தரவின் பேரில் நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக மாவட்ட ஆட்சியர் உத்தரவு போட்டிருந்தார். அந்த உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அவுரி மேட்டு ஓடையில் இருந்த ஆக்கிரமிப்பை அகற்றினோம். அங்கே 40-50 மரங்களை ஆக்கிரமிப்பில் இருப்பதாக சொல்லி குறியீடு செய்யப்பட்டிருந்த மரங்களை BDO JCB -ன் உதவியுடன் அகற்றினோம். அப்போது ஆஜர் எதிரிகள் அவர்களது நிலத்திற்குள் நுழையக்கூடாது என்று சொல்லி தடுத்தார்கள். உள்ளே வந்தால் கொலை செய்து விடுவதாக கொலை மிரட்டல்

விடுத்தார்கள். மேலும் ஆஜர் எதிரிகள் தேவிடியா பயலே என்ற தகாத வார்த்தைகளால் பேசினார்கள். சம்பவம் குறித்து ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் ஊராட்சி செயலாளர் பால்ராஜ் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னை எங்கு வைத்து எத்தனை மணிக்கு எந்த தேதியில் போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் 16.03.2019 ஆம் தேதியன்று மாலை 7.00 மணிக்கு போலீசார் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள். நானும் எதிரியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல வேறுவேறு ஊரைச் சேர்ந்தவர்கள். எதிரியின் ஊருக்கும் என்னுடைய ஊருக்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 கி.மீ தூரம். தற்சமயம் வரை மேற்படி சோத்தான் நாயக்கன்குளம் நிலம் தொடர்பாக ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கைகளின் விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும்.

2) ஊராட்சி செயலர் பால்ராஜும் எதிரிக்கு வேண்டாதவர்களும் சொல்லிக் கொடுத்துதான் இந்த வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 469/2019-ன் கீழ் மாண்பமை மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றத்தால் 27.11.2023 ஆம் தேதியிட்ட உத்தரவில் நான் ஆக்கிரமிக்கப்பட்டதாக சொல்லப்படும் நிலங்கள் எதிரிக்கு சொந்தமானது என்று தீர்ப்பாகி உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) மேற்சொன்ன தீர்ப்பின் விபரம் எனக்கு தெரியும் என்றாலும் அந்த விபரத்தை சொன்னால் இந்த வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக இந்த வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 40-50 தென்னை மரங்களை அகற்றும்போது நானும் முன்நின்றுதான் அகற்றும் பணிகள் செய்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன மரங்கள் வருவாய் துறையினரால் அகற்றம் செய்யப்படவேண்டும் என்று குறியீடு செய்யப்பட்டிருந்தது. மேற்சொன்ன 40-50 தென்னை மரங்கள் எதிரிகளுக்கு சொந்தமானது என்றும் அவர்களுக்கு சொந்தமான நிலத்தில் அமைந்திருந்தது என்று தீர்ப்பாகியுள்ள பட்சத்தில் அந்த தென்னை மரங்களை முறைகேடாக அகற்றியதில் நானும் உடந்தையாக இருந்தேன் என்றால் சரியல்ல. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவை வைத்துக்கொண்டு எதிரிக்கு வேண்டாத ஆட்களின் தூண்டுதலின் பேரில் முறைகேடாக எதிரிகளின் நிலத்தில் இருந்த 50 தென்னை மரங்களை அகற்றி, ஓடையாக அமைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

4) தற்சமயம் தகுந்த நீதிமன்றத்திர உத்தரவு பெற்று எதிரிகள் ஓடையை மாற்றி அமைத்து நிலத்தின் நிலைமையை சீர்செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் மேற்படியாக செய்த அகற்றுதலின் காரணமாக எதிரிகளின் வாழ்க்கை தரமானது 10 ஆண்டுகள் பின்னோக்கி சென்றுவிட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் தேவிடியா பயலே என்ற வார்த்தையால் எதிரி யாரையும் பேசவில்லை என்றால் சரியல்ல.

எதிரிகள் எந்த வேலையையும் செய்யவிடாமல் தடுக்கவில்லை என்றாலும் எதிரி கருப்புசாமி அருவாளை காட்டி கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல.

5) நான் உடந்தையாக இருந்து கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.23 17:38:40 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 23/06/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC /122/2019

List of Witness : Lw5

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சக்திவேல் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ராமசாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 23/06/2026

(எதிரிகள் 1, 2 ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் பிரம்மநாயக்கபுரத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 17.03.2019 ஆம் தேதி காலை 8.00 மணியளவில் அவுரி மேட்டு ஓடை அருகே போலீசார் விசாரித்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரி கருப்புசாமி எனது பக்கத்து தோட்டத்துக்காரர் ஆவார். அவுரி மேட்டு ஓடையில் நானும் முருகானந்தம் என்பவரும் அங்கே இருந்தோம். அங்கே படம் வரைந்து கொண்டிருந்த போலீசார் எங்களிடம் சாட்சி கையொப்பம் செய்து தரும்படியாக கேட்டார்கள். நானும், முருகானந்தமும் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னுடைய தோட்டத்திற்கு எந்த திசையில் எதிரி கருப்புசாமியின் தோட்டம் உள்ளது என்றால் மேற்கு திசையில் உள்ளது. தற்போது கருப்புசாமி தகுந்த நீதிமன்ற உத்தரவை பெற்று அவருடைய தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த ஓடையை

சீர்செய்து முறையாக அமைத்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கருப்புசாமியின் நிலத்திலிருந்து எத்தனை தென்னை மரங்களை பிடிங்கி இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு இந்த விபரம் தெரியாததற்கான காரணம் நான் கையொப்பம் செய்யும்போது எதுவுமே எழுதப்படாத வெள்ளைக் காகிதத்தில் காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.23 17:38:46 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 23/06/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC /122/2019

List of Witness : Lw6

Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முருகானந்தம் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | திருமலைச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 23/06/2026

(எதிரிகள் 1, 2 ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் போலியம்மனூரில் குடியிருந்து பால் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 17.03.2019 ஆம் தேதி காலை 8.00 மணியளவில் சோத்தான் நாயக்கன்குளம் அவுரி மேட்டு ஓடை அருகே போலீசார் விசாரித்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அவுரி மேட்டு ஓடையில் நானும் சக்திவேல் என்பவரும் அங்கே இருந்தோம். அங்கே படம் வரைந்து கொண்டிருந்த போலீசார் எங்களிடம் சாட்சி கையொப்பம் செய்து தரும்படியாக கேட்டார்கள். நானும், சக்திவேலும் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தோம். **பார்வை மகஜர் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் பார்வை மகசரில் கையொப்பம் செய்யும்போது எத்தனை மரங்கள் பிடிங்கி இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. நான் எதுவுமே எழுதப்படாத வெள்ளை காகிதத்தில் ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து

கொடுத்ததால் தான் எனக்கு இந்த விபரங்கள் தெரியாது என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.23 17:38:51 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 23/06/2026